விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, ஆடி - 20 வியாழன் 05.08.2021 மலர் - 2, இதழ் - 121




# முடிவுக்கு வந்தது பட்ஜெட் சர்ச்சை

விஜயபாரதம்

தி.மு.க ஆட்சி பொறுப்புக்கு வந்தது முதல் தமிழக அரசின் 202122ம் ஆண்டுக்கான பட்ஜெட் இதுவரை போடப்படாமல் காலம் தாழ்த்தப்பட்டு வந்தது. இதற்கிடையே தமிழக நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தெரிவித்த முரண்பட்ட கருத்துகள், வெள்ளை அறிக்கை வெளியிடுவோம் என கூறி பல நாட்கள் ஆகியும் ஒன்றும் செய்யாமல் இருந்தது, தேவையில்லாமல் ஈஷா யோகா நிறுவனர் குரு ஜக்கி வாசுதேவையும், பா.ஜ.க வானதி சீனிவாசன் போன்றோரையும் வம்புக்கு இழுத்தது போன்றவை அவர் மீது சர்ச்சையை ஏற்படுத்தின.

இந்நிலையில், நிதி விவகாரத்தில் தமிழக அரசுக்கு ஆலோசனைத் தர நியூயார்க் மாநில பல்கலைக்கழகத்தில் படித்த, பிரபல லேமன் பிரதர்ஸ் நிறுவனத்தில் வர்த்தகம் மற்றும் கூட்டு சேவை மேலாளராக வேலை பார்த்த அமைச்சர் பழனிவேல் தியாகராஜனை நம்பாமல், ரகுராம் ராஜன், எஸ்தர் டஃப்லோ, ஷான் த்ரே, அரவிந்த் சுப்பிரமணியன், எஸ். நாராயணன் உள்ளிட்டோர் அடங்கிய ஆலோசனைக் குழுவை முதல்வர் ஸ்டாலின் அமைத்தார். இது தி.மு.கவிலும் மக்கள் மத்தியிலும் பல்வேறு சர்ச்சைகளை கிளப்பியது.

இப்படி பல நிகழ்வுகளுக்கு இடையே பல நாட்களாக தள்ளிப்போடப்பட்டு வந்த பட்ஜெட் தாக்கல் கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தது. தலைமை செயலகத்தில் முதல்வர் தலைமையில் அமைச்சரவை கூட்டம் நடைபெற்றது. இதில் பட்ஜெட் தாக்கல் குறித்து ஆலோசிக்கப்பட்டது. அதன் முடிவில், ஆகஸ்ட்13ம் தேதி பட்ஜெட் தாக்கல் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டது. முன்னதாக, வேளாண்மைக்கு என தனி பட்ஜெட் தாக்கல் செய்யப்படும் என தி.மு.க அறிவித்தது. அது தற்போது நடைமுறைக்கு வருமா, சொன்னதுபோல வெள்ளை அறிக்கைகள் வெளியாகுமா என்பதை பொறுத்து இருந்துதான் பார்க்க வேண்டும்.

## தாமிரபரணிக்கு சீர்

ஆடி 18ம் பெருக்கு முன்னிட்டு தாமிரபரணி தாய்க்கு சீர்செய்யும் ஆன்மீக நிகழ்வு தடைகளைத் தகர்த்தெறிந்து 108 சீர்பொருட்களுடன் நடைபெற்றது. இதேபோல காவிரியிலும் காவிரி தாய்க்கு சீர் செய்யும் நிகழ்ச்சி நடைபெற்றது.



விஜயபாரதம்

## கோயில் மாடுகள் பொதுநல மனு



விஜயபாரதம்

அண்மையில், ஸ்ரீரங்கம் ஸ்ரீ ரங்கநாத சுவாமி கோயிலின் 100க்கும் மேற்பட்ட பசுமாடுகள் எவ்வித அறிவிப்பும் இன்றி தானமாக அளிக்கப்பட்டது. கோயிலுக்கு பக்தர்கள் அளித்தவற்றை காப்பது ஹிந்து அறநிலையத் துறையின் கடமை. அது நிலம், நகைகளுக்கு மட்டுமல்ல பசுக்களுக்கும் பொருந்தும். அப்படி இருக்கையில், அவற்றை தானமாகத் தர இவர்கள் யார்? என பொதுமக்கள் கேள்வி எழுப்பினர்.

இந்நிலையில், கோயில் நிர்வாகம், நன்கொடையாக வழங்கப்பட்ட பசுக்களை இயற்கையான சூழலில் பராமரிக்க 10 ஏக்கர் நிலம் ஒதுக்க வேண்டும், அவற்றுக்கு இயற்கை மரணம் ஏற்படும்வரை காக்க வேண்டும். அவற்றை யாருக்கும், எக்காரணம் கொண்டும் தானமாக தரக்கூடாது. கால்நடை கண்காணிப்பு பணிக்குழு அமைத்து கண்காணிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகள் அடங்கிய 7 மனுக்களை ரங்கராஜன் நரசிம்மன் தாக்கல் செய்திருந்தார்.

நேற்று சென்னை உயர் நீதிமன்றத்தால் அவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. அது குறித்த விரிவான அறிக்கையை தமிழக அரசு நீதிமன்றத்தில் 4 வாரங்களுக்குள் தாக்கல் செய்ய வேண்டும். எத்தனை கோயில்களில் எத்தனை பசுக்கள், காளைகள், கன்றுகள், மற்ற கால்நடைகள் உள்ளன, அவற்றின் வயது என்ன, எங்கு உள்ளது போன்ற விவரங்களையும் தாக்கல் செய்ய வெண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டது.

## தாய்மதம் திரும்புவோம்



மதுரை மாநகர் புதூர் நகரில் முஸ்லிம் மதத்தில் இருந்து முழு மனதுடன் தங்கள் சொந்த விருப்பத்தின் பேரில் தங்கள் தாய் மதமான ஹிந்து மதத்திற்குத் திரும்பிய குடும்பத்தினர்.

# கோயில் நிலம் மீட்க வழக்கு



விஜயபாரதம்

வழக்கறிஞர் யானை ராஜேந்திரன், சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றை தாக்கல் செய்தார். அதில், திருவாரூர் மாவட்டம் திருக்கண்ண மங்கை கிராமத்தில் 1,000 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட பக்தவத்சல பெருமாள் கோயில் உள்ளது. இக்கோயிலுக்கு விஜயரகுநாத அரசர் 400 ஏக்கர் நிலங்களை தானமாக கொடுத்துள்ளார். இந்த நிலம், அதன் புனரமைப்பு உள்ளிட்ட விவரங்கள் கொண்ட தாமிர பட்டயம் தற்போது கோயிலில் இல்லை. ஹிந்து அறநிலையத்துறை கமிஷனர் அலுவலகத்துக்குகொண்டு செல்லப்பட்ட அது இதுவரை திருப்பி தரப்படவில்லை. இதுகுறித்து உரிய விசாரணை நடத்தப்பட வேண்டும்; 400 ஏக்கர் நிலத்தில் 7 ஏக்கர் நிலம்தான் கோயில் வசம் உள்ளது. மற்றவை தனியார் ஆக்கிரமிப்பில் உள்ளன. அதற்கான குத்தகையோ வாடகையோ வசூலிக்கப்படவில்லை. அவற்றின் மதிப்பு 5,000 கோடி. எனவே தாமிர பட்டயத்தையும் 400 ஏக்கர் நிலங்களையும் மீட்க தமிழக அரசுக்கு ஹிந்து அறநிலையத்துறைக்கு உத்தரவிட வேண்டும்' என கோரியிருந்தார். இதற்கு பதில் அளிக்க அரசு தரப்பில் அவகாசம் கோரப்பட்டது. அவகாசம் வழங்கி விசாரணையை நீதிமன்றம்தள்ளி வைத்தது.



விஜயபாரதம்

# சேரும் பதக்கங்கள்

டோக்கியோ ஒலிம்பிக் குத்துச்சண்டை போட்டியில் இந்திய வீராங்கனை லவ்லினா 69 கி.கி பிரிவில் அரையிறுதியில் 05 என்ற புள்ளிகளில் துருக்கி வீராங்கனையிடம் தோல்வியடைந்தார். இதனால் அவருக்கு வெண்கலப் பதக்கம் கிடைத்துள்ளது. இது, டோக்கியோ ஒலிம்பிக்கில் பாரதம் வென்ற 3வது பதக்கம். அசாம் மாநிலத்தை சேர்ந்த லவ்லினா பங்கேற்ற அரை இறுதிப்போட்டி நேற்று காலை 11 மணிக்கு நடைபெற்றது. இதனையொட்டி, அவர் வெற்றி பெற வேண்டி அசாம் முதல்வர் விளக்கு ஏற்றி பிரார்த்தனை செய்தார் என்பதும் இப்போட்டியை காண்பதற்காக அம்மாநில சட்டப்பேரவை 20 நிமிடம் ஒத்தி வைக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

மல்யுத்தப் பிரிவில், பாரதத்தின் வீரர்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். 57 கிலோ எடைப்பிரிவில் பாரதத்தின் ரவிகுமார் தாஹியா, கஜகஸ்தானின் நூரிஸ்லாம் சனாயேவை தோற்கடித்து இறுதிப்போட்டிக்குள் நுழைந்தார். இதன் மூலம் பாரதத்திற்கு தங்கம் அல்லது வெள்ளிப் பதக்கம் கிடைப்பது உறுதியாகி உள்ளது. மல்யுத்தத்தில் 86 கிலோ எடைப்பிரிவில் மற்றொரு பாரத வீரர் தீபக் புனியா, சீன வீரருடன் மோதி 6க்கு 3 என்ற புள்ளிக்கணக்கில் வென்று அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

# சேவைத்துளி

தமிழகம் கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோயிலில் தேசிய சேவாசங்கம் சார்பாக ஆம்புலன்ஸ் சேவை துவக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சி நாகர்கோயிலில் உள்ள ஆர்.எஸ்.எஸ் அலுவலகத்தில் நடைபெற்றது.

விஜயபாரதம்



# கோயிலில் வழிபாடு தடை



விஜயபாரதம்

ராஜபாளையம், சுந்தரநாச்சியார்புரம் கிராமத்தில் பட்டியலின சமுதாய மக்கள் வழிபாடு செய்வதற்காக காளியம்மன் கோயில், முனியாண்டி கோயில் உள்ளது. அந்த ஊரில் கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த வர்கீஸ் என்பவர், தான் மட்டுமே அக்கோயிலின் நிர்வாகி, தனக்கு விருப்பப்பட்ட நேரத்தில்தான் கோயில் திறக்கப்படும் என கூறியுள்ளார். ஊர் நிர்வாகம் சார்பாக பல முறை சேத்தூர் காவல்நிலையத்தில் முறையிட்டும், ராஜபாளையம் வட்டாட்சியரிடம் முறையிட்டும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மாறாக காவல்நிலைய அதிகாரிகள், வட்டாட்சியர், வருவாய் நிர்வாக அலுவலர் உள்ளிட்டோர் வர்கீசுக்கு ஆதரவாக செயல்பட்டுள்ளனர். சமீபத்தில் ஆடிப்பெருக்கை முன்னிட்டு வழிபாடு செய்ய அனுமதி கேட்டபோது, வர்கீசும் அதிகாரிகளும் பட்டியலின மக்களிடம் அவமரியாதையாக நடந்துகொண்டனர். 13 வயது சிறுவன் ஒருவனை கடுமையாக தாக்கினர். இதனை கண்டித்து ஊர் மக்கள் ராஜபாளையம் காந்தி சிலை ரவுண்டானாவில் சாலை மறியல் செய்தனர். விஷ்வ ஹிந்து பரிஷத் அமைப்பினரும் இதில் கலந்துகொண்டனர். வர்கீஸ் உட்பட சம்பந்தப்பட்டவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்காமல் போராடிய பொதுமக்களை காவல்துறை கைது செய்துள்ளது.

# மேற்கு வங்க வன்முறை வழக்கு



விஜயபாரதம்

மேற்கு வங்கத்தில் தேர்தலுக்கு பிந்தைய வன்முறை தொடர்பான வழக்கு, கல்கத்தா உயர்நீதிமன்றத்தில், 5 நீதிபதிகள் கொண்ட அமர்வு விசாரித்து வந்தது. அதில் அனைத்து தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டு விசாரணை முடிவடைந்தது. தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டு உள்ளது. முன்னதாக இவ்வழக்கில் ஆஜரான மத்திய அரசின் சார்பில் ஆஜரான கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ஜெஹாங்கீர் தஸ்தூர், 'நீதிமன்றம் அனுமதித்தால், இதனுடன் சம்பந்தப்பட்ட சில கடுமையான குற்ற வழக்குகளை என்ஐஏ அல்லது சிபிஐ விசாரணை மேற்கொள்ளப்படும்' என தெரிவித்தார். மேற்கு வங்கத்தில் வன்முறை நடந்ததை யாரும் மறுக்க முடியாது. எனவே, விசாரணையின் போது, மனுதாரர்களுக்கான வழக்கறிஞர்களும் இதனை தீர விசாரிக்க எஸ்.ஐ.டி விசாரணை தேவை என்று தேசிய மனித உரிமைகள் ஆணையம் உட்பட அனைத்து மனுதாரர்கள் தரப்பில் நீதிமன்றத்தில் கோரிக்கை வைக்கப்பட்டது. ஒரு மாநிலத்தில் சட்டம், ஒழுங்கு நிலைமைக்கு தேர்தல் ஆணையம் பொறுப்பல்ல என்று வாதிடப்பட்டுள்ளது. " மே 5ம் தேதிதான் தங்களின் புதிய அரசு அமைந்தது என மேற்கு வங்க அரசு தனது பொறுப்பை தட்டிக் கழித்துவிட்டது. அம்மாநில காவல்துறை சார்பில் ஆஜரான வழக்கறிஞர் கபில் சிபல், மனுதாரர்களின் கோரிக்கையை எதிர்த்தார். என்.ஹெச்.ஆர்.சி அறிக்கை ஆதாரமற்றது, அரசியல் உள்நோக்கம் கொண்டது என்று கூறினார்..

# கோயிலில் கிறிஸ்தவர்கள் அராஜகம்



விஜயபாரதம்

நெல்லை டவுன் அக்கசாலை விநாயகர் கோவில் தெரு விஸ்வகர்மா சமுதாயத்திற்கு பாத்தியப்பட்ட சங்கிலி பூதத்தார் கோயிலின் இடத்தில் குடியிருக்கும் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தை சேர்ந்த ஜான்சன், செலின்மேரி, சைமன் ஆகியோர், அக்கோயிலிம் மதிலுக்கு சுண்ணாம்பும் காவியும் அடித்தபோது, கோயிலுக்குள் வந்து மரக்கட்டைகளை எறிந்தும் சுண்ணாம்பை கீழே கொட்டியும் சுவற்றில் வெள்ளை அடிக்க விடாமல் தடுத்தனர். தண்ணீரை ஊற்றி அவற்றை அழித்தனர். மேலும், ஹிந்து தெய்வங்களை இழிவாக பேசி மதக்கலவரத்தை தூண்டும் விதமாக செயல்பட்டனர். இதுவே ஒரு ஹிந்து கிறிஸ்தவ சர்ச்சுக்குள் சென்று இப்படி செய்தால் என்ன நடக்கும். தற்போதைய ஆட்சியில், உடனே குண்டர் சட்டம் பாயும் என்பது திண்ணம். தற்போது, இந்த மூவர் மீது நெல்லை மாநகரக் காவல்துறை என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்று பார்ப்போம்? கோயில் இடத்தை பிற மதத்தவருக்கு வாடகைக்கு விடுபவர்களுக்கு இது ஒரு பாடமாக இருக்கும் என அப்பகுதி மக்கள் ஆதங்கம் தெரிவித்தனர்.

# ராமலிங்கம் கொலை வழக்கு


விஜயபாரதம்

கும்பகோணம் அருகே திருபுவனத்தைச் சேர்ந்த பா.ம.க பிரமுகரான ராமலிங்கம், அப்பகுதியில் பாத்திரக்கடை நடத்தி வந்தார். திருபுவனம் சுற்றுப்பகுதியில் நடந்த, மதமாற்ற நிகழ்வுகளை தட்டிக்கேட்டார். அந்த வீடியோ சமூக வலைதளங்களில் பரவியது. இதனையடுத்து, கடந்த 2019 பிப்ரவரி 5ம் தேதி ராமலிங்கத்தை முஸ்லிம் பயங்கரவாதிகள் கொடூரமாக கொலை செய்தனர். காவல்துறை விசாரணையில், இக்கொலையில் திருவிடைமருதூர், கும்பகோணம் சுற்றுவட்டார பகுதிகளைச் சேர்ந்த 18 முஸ்லிம் பயங்கரவாதிகள் ஈடுபட்டது தெரியவந்தது. அவர்களில், 12 பேர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். 2019ல் இந்த கொலை வழக்கு தேசிய புலனாய்வு முகமையான என்.ஐ.ஏவுக்கு மாற்றப்பட்டது. ரெஹ்மான் முகமது அலி ஜின்னா, அப்துல் மஜீத், புர்ஹானுதீன், சாகுல் ஹமீது மற்றும் நபீல் ஹாசன் ஆகிய 6 பேரை தேடப்படும் குற்றவாளிகளாக அறிவித்தது என்.ஐ.ஏ. இந்நிலையில், கடந்த 2 ஆண்டுகளாக தலைமறைவாக இருந்த ரெஹ்மான் சாதிக்கை என்.ஐ.ஏ அதிகாரிகள் சமீபத்தில் கைது செய்தனர். மீதம் உள்ள 5 பேர் பதுங்கி இருக்கும் இடம் அடையாளம் காணப்பட்டுள்ளது. அவர்களும் விரைவில் கைது செய்யப்படுவார்கள் என என்.ஐ.ஏ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# தமிழக அரசின் ஓரவஞ்சனை

கொரோனா பரவலை காரணம் காட்டி தமிழகம் முழுவதும் பிரசித்த பெற்ற ஹிந்து ஆலயங்களில் பக்தர்கள் தரிசனம் செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மற்ற மதங்களை சார்ந்த வழிபாட்டுத் தலங்களில் வழக்கமான வழிபாடுக நடத்தப்படுகின்றன. அதற்கு தமிழக அரசு எந்த தடையும் விதிக்கவில்லை. ஆனால் ஹிந்து கோயில்களில் மட்டும் பக்தர்கள் வழிபட தடை செய்துள்ளது. இதனை கண்டித்து நாகர்கோவில் நாகராஜா கோயில், மண்டைக்காடு பகவதி அம்மன் கோயில், குமாரகோவில், முருகன் கோயில், சுசீந்திரம் தாணுமாலய சுவாமி கோயில் உள்ளிட்ட பல்வேறு திருக்கோயில்களின் முன்பு நேற்று மாலை பா.ஜ.கவினர், பல்வேறு ஹிந்து அமைப்புகள் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர்.இந்த ஆர்ப்பாட்டங்களில் பெண்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

விஜயபாரதம்



# ஹிந்துக்கள் வாழ்விடம் பறிப்பு



விஜயபாரதம்

உத்தரபிரதேசத்தின் மொராதாபாத்தில் உள்ள லஜ்பத் நகர் ஷிவ் விஹார் காலனியின் 81 குடும்பங்கள் கூட்டாக 'வீடு விற்பனைக்கு' என போஸ்டர் ஒட்டிவிட்டு வீடுகளை காலி செய்து சென்றுவிட்டனர். இது குறித்து விசாரித்தபோது, அங்குள்ளவர்கள் பெரும்பாலும் சைவ உணவு முறையை பின்பற்றும் ஹிந்துக்கள். அங்கு முதலில் இரண்டு வீடுகளை நிலத்தின் மதிப்பைவிட மூன்று மடங்கு விலை கொடுத்து முஸ்லிம்கள் வாங்கி குடியேறினர். பின்னர் தங்கள் வீட்டு இறைச்சி கழிவுகளை அக்கம்பக்கத்து வீடுகளில் கொட்டுவது, சண்டையிடுவது என 30 சதவீத வீடுகளை வாங்கினர். தற்போது அங்கு எஞ்சியுள்ள 81 குடும்பத்தினரையும் மதம் மாறினால் மட்டுமே இங்கு வாழ முடியும் என மிரட்டியும் கட்டாயப்படுத்தியும் வெளியேற்றுகின்றனர். தற்போது, இந்த விவகாரம் குறித்து விசாரித்து நடவடிக்கை எடுக்க மொரேதாபாத் காவல்துறையினருக்கு பரேலி மண்டல ஏ.டி.ஜி உத்தரவிட்டுள்ளார்.

# தி.மு.க.வின் உண்மை முகம்



விஜயபாரதம்

திருவள்ளூரை அடுத்த மணவாள நகரில் உள்ள அற்புத ஜெபகோபுரம் ஏ.ஜி தேவாலயத்தின் 40ம் ஆண்டு துவக்க விழாவில் பங்கேற்று பேசிய தமிழக பால்வளத்துறை அமைச்சர் நாசர், அண்மையில் சர்ச்சைக்குறிய வகையில் பேசி கைதான பாதிரி ஜார்ஜ் பொன்னையாவின் 'தி.மு.க ஆட்சிக்கு வந்தது கிறிஸ்தவர்கள் போட்ட பிச்சை' என்ற கருத்தை மெய்ப்பிக்கும் விதமாக, 'கிறிஸ்தவர்களின் வலிமையான ஜெபத்தினால்தான் தி.மு.க ஆட்சிக்கு வந்துள்ளது' என தெரிவித்தார். அமைச்சரின் இந்த பேச்சு, பொதுமக்களிடமும் தி.மு.கவினரிடமும்கூட சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. மேலும், மத்தியில் காங்கிரஸ் ஆட்சி செய்தபோது சிறுபான்மையினருக்கு நன்மை செய்ததாகவும், கடந்த 7 வருடங்களாக அவர்கள் துன்பப்பட்டு வருவதாகவும் பொதுமேடையில் அப்பட்டமான பொய்யை கூறியுள்ளார். அமைச்சரின் இது போன்ற கருத்துகள், தி.மு.கவின் ஹிந்து விரோத மனப்பான்மையை வெளிச்சம் போட்டுக் காட்டுவதாகவே அமைந்துள்ளதாக பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

# வளரும் பாரதம்

விஜயபாரதம்

ஐ.எச்.எஸ் மார்க்கிட் சர்வே என்ற இங்கிலாந்தை சேந்த நிறுவனம் நடத்திய ஆய்வில், பாரதத்தின் உற்பத்தித் துறை சமீபத்திய மாதங்களில் ஜூலை மாதத்தில் வலுவான வளர்ச்சி விகிதத்தைக் கண்டுள்ளது. கொள்முதல் மேலாளர் குறியீடு (பி.எம்.ஐ) ஜூன் மாதத்தில் 48.1 ல் இருந்து ஜூலை மாதம் 55.3 ஆக உயர்ந்துள்ளது. கொள்முதல் மேலாளர்களின் குறியீடு (பி.எம்.ஐ) ஜூன் மாதத்தில் 48.1 ல் இருந்து ஜூலை மாதம் 55.3 ஆக உயர்ந்துள்ளது. கொரோனா தொற்று குறைந்து வருமானால் 2021 ஆண்டிற்கான தொழில்துறை உற்பத்தி வளர்ச்சி 9.7 சதவீதமாக இருக்கும். தொழிற்சாலை நடவடிக்கைகள் மீண்டு வருகிறது. கொரோனா இரண்டாவது அலையின் தாக்கம் குறைந்துள்ளதால் வணிகங்கள் உற்பத்தி நடவடிக்கைகளை அதிகரித்துள்ளன. தேச வளர்ச்சியை கருத்தில் கொண்டு ரிசர்வ் வங்கி அதன் ஆகஸ்ட் மாத கூட்டத்தில் வட்டி விகிதங்களை மாற்றாமல் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தொடரும் வன்முறைகள்

மேற்கு வங்க மாநிலத்தில், முதல்வர் மமதாவின் திருணமூல் கட்சியினர் தேர்தலுக்கு பிறகு ஆரம்பித்து வைத்த வன்முறைகள் முடிவில்லா தொடர்கதை ஆகிவிட்டன. சமீபத்தில், மேற்கு வங்கத்தின் இருவேறு பகுதிகளில் இரண்டு பா.ஜ.க தொண்டர்கள் கொல்லப்பட்டுள்ளனர். கடந்த 3ம் தேதி, பீர்பம் மாவட்டத்தில் உள்ள கொய்ராசோலில் உள்ள ஒரு பாழடைந்த கட்டடத்தில், பா.ஜ.க தொண்டர் இந்திரஜித் சூத்ரதர் என்பவர் கைகள் பின்னால் கட்டப்பட்ட நிலையில் தூக்கில் பிணமாக தொங்கினார். அதே நாளில் மற்றொரு நிகழ்வில் பா.ஜ.க தொண்டரான தபன் கத்துவா என்பவர் அதிகாலை பூர்போ மெதினிபூர் மாவட்டத்தில் உள்ள ஈக்ரா என்ற பகுதியில் உள்ள ஒரு குளத்தில் இறந்து கிடந்தார். அவர்கள் இருவரின் குடும்பத்தினரும் இதற்கு காரணமாக திருணமூல் கட்சியை குற்றம் சாட்டியுள்ளனர்.

# ஈரான் மீது குற்றச்சாட்டு



விஜயபாரதம்

லண்டனில் இருந்து செயல்படும் இஸ்ரேல் நாட்டின் ஸோடியாக் மரிடைம் நிறுவனத்தின் எம்.வி மெர்சிர்ஸ்ட்ரீட் என்ற எண்ணெய்க் கப்பல், கடந்த ஜூலை 29ல் ஓமனுக்கு அருகே அரபிக் கடலில் தாக்குதலுக்கு உள்ளானது. இதில் இரு கப்பல் பணியாளர்கள் உயிரிழந்தனர். இதற்கு காரணம் ஈரான்தான் என இஸ்ரேல் குற்றம் சாட்டியது. அதனை ஈரான் மறுத்தது. இந்நிலையில், இதுகுறித்து நேட்டோ செய்தித் தொடர்பாளர் டைலன் ஒயிட் இந்த தாக்குதலை கண்டித்ததுடன் பிராந்திய நிலைத்தன்மையை ஈரான் குலைக்கிறது என கூறினார். ஐரோப்பிய ஆணைய செய்தித் தொடர்பாளர் நபிலா மஸ்ரலி, 'கடல் போக்குவரத்து சுதந்திரத்தைப் பறிக்கும் வகையில் ஈரான் மேற்கொள்ளும் இதுபோன்ற நடவடிக்கைகளை ஏற்க முடியாது' என கண்டித்துள்ளார்.

# ஆப்கன் தூதர் கோரிக்கை



ஆப்கானிஸ்தான் வெளியுறவு அமைச்சர் முகமது ஹனீப் ஆத்மர், பாரத வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். அப்போது அவர், 'ஆப்கானிஸ்தான் குறித்து விவாதிக்க ஐ.நா சபையின் அவசரகால பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தை கூட்ட வேண்டும். தலிபான் வன்முறை காரணமாக ஆப்கானிஸ்தானில் நிகழும் துயரத்தை நிறுத்த ஐ.நா சபையும் சர்வதேச சமூகமும் முக்கிய பங்காற்ற வேண்டும். தற்போதைய ஐ.நா சபையின் தலைவராக உள்ள பாரதம் இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆப்கன் மக்கள் மீது தலிபான்களின் கொடூரமான தாக்குதல்களை நிகழ்த்துகின்றனர். இது பல்லாயிரம் பொதுமக்களின் மரணத்திற்கும் இடம்பெயர்வுக்கும் வழிவகுத்துள்ளது. ஆப்கானிஸ்தானில் வெளிநாட்டு (பாகிஸ்தான்) பயங்கரவாத குழுக்களுடன் இணைந்து தலிபான்கள் நடத்தும் தாக்குதல்கள் பேரழிவை உண்டாக்கும். அவர்கள் போர் விதிகளை மீறுகின்றனர். சர்வதேச மனிதாபிமான சட்டம் மீறப்படுகிறது' என கூறினார்.

---

# பாரத வம்சாவளி மாணவி தேர்வு



விஜயபாரதம்

அமெரிக்க கல்லூரிகளில் சேர எஸ்.ஏ.டி. மற்றும் ஏ.சி.டி. என்ற தகுதி தேர்வு நடைபெறும் இதில் வெற்றி பெறுவோரில் சிறந்த அறிவாற்றல் உள்ளோரை கண்டறிய ஜான் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகத்தின் வி.டி.வி. மையம் ஒரு தேர்வு நடத்தும். இதில் உலகளவில் ஏராளமான மாணவர்கள் பங்கேற்பார்கள். இந்த ஆண்டு இத்தேர்வில் 84 நாடுகளைச் சேர்ந்த 19 ஆயிரம் மாணவர்கள் பங்கேற்றனர். இதில் 20 சதவீதத்திற்கும் குறைவானோரே தேர்ச்சி பெற்றனர். அதில் பாரத வம்சாவளியை சேர்ந்த 5ம் வகுப்பு மாணவியான நடாஷா பெரியும் ஒருவர். அவருக்கு, 'சிறந்த அறிவாற்றல் கொண்ட மாணவி' என்ற 'உயரிய கௌரவ விருது' வழங்கப்பட்டுள்ளது. நடாஷாவின் திறமைகள் எட்டாம் வகுப்பு மாணவிக்கு நிகராக உள்ளதாக தேர்வுக் குழு சான்றளித்துள்ளது.



நமது தேசியக்கொடியை பிரிண்ட் செய்த இதை போன்ற மாஸ்க்குகள் ஆங்காங்கு விற்கப்படுகின்றன. இது நமது தேசியக்கொடியை அவமதிக்கும் செயல். தயவுசெய்து இவற்றை வாங்கி அணியாதீர்கள்.

**பெருமையுடன் நமது மத அடையாளங்களை வெளிப்படுத்துவோம்**



# சட்டத்துறை அமைச்சர்கள் மாநாடு



விஜயபாரதம்

ஆகஸ்ட் 6ம் தேதி நடைபெறும் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் சட்டத்துறை அமைச்சர்களின் எட்டாவது கூட்டம் நடைபெற உள்ளது. இதில் பாரதத்தின் சார்பில் மத்திய சட்டத்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு, சட்டத்துறை இணை அமைச்சர் பேராசிரியர் எஸ்.பி.சிங் பாகேல்ம் கலந்து கொள்கின்றனர். கஜகஸ்தான், சீனா, கிர்கிஸ்தான், பாகிஸ்தான், ரஷ்ய கூட்டமைப்பு, தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகளும் இக்கூட்டத்தில் பங்கேற்கின்றன. பெரும்பாலானவர்கள் வீடியோ கான்பரன்சிங் வழியாக இதில் பங்கேற்கின்றனர். சந்திப்பின் போது, உறுப்பு நாடுகளின் ஒத்துழைப்பு, கொரோனா விவகாரங்களில் தேச சட்டங்களின் பங்கு, குடிமக்களுக்கு இலவச சட்ட உதவி, ஊழலை எதிர்கொள்வது உள்ளிட்ட விஷயங்கள் விவாதிக்கப்படும். கூட்டத்தைத் தொடர்ந்து ஒரு கூட்டு அறிக்கையும் கையெழுத்திடப்படும். இக்கூட்டத்திற்கு முன்னதாக, நேற்றும் இன்றும் இந்நாடுகளின் பல்வேறு சட்ட நிபுணர்கள், சட்டத் துறை செயலாளர்கள் அதிகாரிகள் பங்கு பெறும் கூட்டங்கள் நடைபெற்று வருகிறது.

# பிரதமர் இல்லம் வாடகைக்கு



விஜயபாரதம்

பாகிஸ்தான் கடும் நிதி நெருக்கடியில் சிக்கி தவிக்கிறது. விலைவாசிகள் கடுமையாக உயர்ந்துள்ளன. திவாலாகும் நிலையில் உள்ள பாகிஸ்தானுக்கு கடன் கொடுக்க ஐக்கிய அரபு அமீரகம் உள்ளிட்ட பல நாடுகளும் தயக்கம் காட்டுகின்றன. பயங்கரவாதத்துக்கு நிதி உதவி பண மோசடி தொடர்பாக எப்.ஏ.டி.எப். எனப்படும் நிதி நடவடிக்கை பணிக்குழுவின் 'கிரே' எனப்படும் மோசமான நாடுகள் பட்டியலில் பாகிஸ்தான் இருப்பதால் அதற்கு நிதியுதவி கிடைப்பதும் கடினமாக உள்ளது. தற்போதைக்கு சீனாவின் தயவால் காலம் ஓட்டுகிறது பாகிஸ்தான். முன்னதாக, பாகிஸ்தான் பிரதமராக இம்ரான் கான் பதவியேற்றபோது 'பிரதமர், கவர்னர் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் இனி அரசு பங்களாவில் வசிக்க மாட்டார்கள். சாதாரண வீடுகளில் வசிப்பார்கள். இதில் மீதமாகும் பணம் மக்கள் நல திட்டங்களுக்கு செயல்படுத்தப்படும்' என அறிவித்தார். எனினும் அவர்களுக்கான பங்களாக்களா பராமரிக்க பெரும்தொகை செலவானது. அதனை ஈடுகட்ட, பிரதமரின் பங்களா திருமணம், பொது நிகழ்ச்சிகள் உள்ளிட்டவைகளுக்கு வாடகைக்கு விடப்பட்டு வருகிறது. இம்ரான்கானின் ராணுவ செயலர் வாசிம் இப்திகாரின் மகளின் திருமணம்கூட சமீபத்தில் பிரதமர் பங்களாவில்தான் நடந்துள்ளது.



# பல்லியும் திருமணமும்

அந்த சுவற்றின் மேல் ஒட்டியிருந்த பல்லிக்கு அகோரப் பசி.. இன்று சாப்பிட ஒரு சிறு விட்டில் பூச்சிகூட இல்லையே என்ற ஏக்கம்.. வயிற்றைக் கிழிக்கும் பசியோடு

அது அங்கும் இங்கும் நோட்டமிட்டது. அப்போது சுவற்றில் தூரத்தில் ஒரு பூச்சி வந்து அமர்ந்தது.

ஆஹா! அற்புதமான இரை என்று அகமகிழ்ந்த பல்லி, அந்த இரையை நோக்கி அலுங்காமல் சென்றது. அந்த பூச்சியோ எதையும் அறியாமல், வேடிக்கை பார்த்த வண்ணம் இருந்தது. பல்லி நாக்கை நீட்ட முற்பட்டபோது, சட்டென்று வேறு எங்கிருந்தோ ஒரு பல்லி வந்து இரையைக் கவ்விக் கொண்டுபோனது..

அடடா.. கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லையே என ஆத்திரங்கொண்ட முதல் பல்லி, கோபமாகக் கத்திக் கொண்டே, இரண்டாவது பல்லியை விரட்ட ஆரம்பித்தது.

இதைப் பார்த்து சுதாரித்துக் கொண்ட இரண்டாம் பல்லி முன்னோக்கி வேகமாக ஓடியது. முதல் பல்லி இன்னும் வேகமெடுத்து விரட்ட, இரண்டாம் பல்லியும் சளைக்காமல் ஓடியது. ஓடிக்கொண்டிருந்த இரண்டாம் பல்லியின் கால் நழுவவே, "பொத்"தென்று கீழே விழுந்தது.

முதல் பல்லியும் விடவில்லை... அதே இடத்தில் விழுந்து, விடாமல் விரட்டியது. தொடர்ந்து ஓடிய இரண்டாம் பல்லி, ஒரு சந்துக்குள் ஒளிந்தது.

விரட்டிக் கொண்டிருந்த முதல் பல்லிக்கு அருகே இன்னோர் பூச்சி அமர்ந்தது. அந்த பூச்சியை "ஸ்வாஹா" செய்து காலை உணவை முடித்தது முதல் பல்லி.

அப்போது, அந்த வீட்டில் இருந்த மனிதர்கள் பேசிக் கொண்டனர், "நான்தான் அப்பவே இந்த ஜாதகம் வேண்டாம்'னு சொன்னேன். அப்பவே கௌளி கத்துச்சு. அதையும் மீறி நீங்க எடுத்தீங்க. இப்ப பாருங்க ஒண்ணுக்கு ரெண்டு கௌளி நம்ம மேலயே வந்து விழுகுது. இது பயங்கர அபசகுணம். அதனாலதான் சொல்றேன் இந்த ஜாதகம் வேண்டாம். வேற ஜாதகம் பாருங்க". என்று.

இப்படித்தான் ஒரு சிறு பூச்சி சுவற்றில் உட்கார்ந்ததற்கும், எங்கோ நடைபெறப் போகும் திருமணம் நிற்பதற்கும் ஒரு சம்பந்தம் உண்டாகிறது!!!